ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2303 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21

*2303 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1642 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1643 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1643 | ஏல விற்பனைகள் | 1645 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) உண்ணாட்டரசிறை (திருத்தும்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கை வரைதல் தொழினுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை நில அளவைத் திணைக்களம்

பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலை மனு கோரல்
விலைமனு இலக்கம் - SD / V/2022

01. இலங்கை நில அளவைத் திணைக்களமானது அதற்குச் சொந்தமான பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பின்வரும் பொருட்களை விற்பனை செய்வற்காக விலை மனுக்களைக் கோருகின்றது.

02. ஏலத்திற்குரிய பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களை பரிசீலித்தல் என்பன 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வரை அலுவலக நேரத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ( கொள்முதல் மற்றும் வழங்கல்), சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் (வள முகாமைத்துவம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்க முடியும்.

03. விலைமனுக்களை முன் வைப்பதற்காக உரிய விலை மனு பத்திர விண்ணப்ப படிவங்களை மீள செலுத்தப்படாத ஆயிரம் ரூபாய் (ரூ. 1,000.00) மூலம் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவின் அடிப்படையில் 2022.11.10 ஆந் திகதி பி.ப. 2.30 மணி வரை கொழு ரூபாய் ம்பு 05, கிருல வீதி, இலக்கம் 150 இல் அமைந்துள்ள நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (கொள்முதல் மற்றும் வழங்கல்) அவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

04. ஒவ்வொரு பொருட் தொகைக்கும் (Lot) வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட விலை மனுக்களை கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொகை இலக்கம் ......." மற்றும் "பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களுக்கான விலைகள்" எனக் குறிப்பிடப்பட்டு 2022, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய விதத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (கொள்முதல் மற்றும் வழங்கல்) , நில அளவைத் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டிய, கொழும்பு 05 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இல்லை எனில் கொள்முதல் மற்றும் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலை மனு பெட்டியில் இடுதல் வேண்டும். அத்தினத்திலேயே மு.ப. 11.05 இற்கு விலை மனுக்கள் திறக்கப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலை மனுதாரர் அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.

05. தாமதமாக கிடைக்கப் பெறுகின்ற அல்லது பூரணமற்றதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலை மனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், பொருட்களை விற்பனை செய்யும் போது முன் வைக்கப்படும் விலை மனுவின் பெறுமதிக்கு மேலதிகமாக அத்தினத்தின் போது நிலவுகின்ற வெட் வரியும் கொள்வனவாளரால் செலுத்தப்படல் வேண்டும். இவ் விற்பனையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானமானது இறுதித் தீர்மானம் ஆகும்.

விற்பனைக்கு முன்மொழியப்பட்டுள்ள பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களின் வகைகள்.-

1. மடிக் கணினிகள்
2. தொலைநகல்கள், தட்டச்சு இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், வருடி இயந்திரங்கள்
3. கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்
4. நில அளவை உபககரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
5. கணினி கதிரைகள், கணினி மேசைகள் மற்றும் நான்கு இலாச்சிகளைக் கொண்ட உருக்கு அலுமாரிகள்
6. மின் உபகரணங்கள்
7. மாதிரியெடுப்பு உபகரணங்கள்
8. ஏனைய சிதைவுப் பொருட்கள் (பூட்டுச் சாவி, நீர் வடிகலன் போன்றவை)

நில அளவையாளர் நாயகம்,
நில அளவையாளர் நாயக அலுவலகம்.

இலக்கம் 150, கிருல வீதி,
கொழும்பு 05.
தொலைபேசி இலக்கங்கள்: 0112368106, 0112 369034,
2022, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி.

10- 311

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**(திருத்தம்)**

**நீதிவான் நீதிமன்றம்- கல்முனை**

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

*2302 ஆம் இலக்க 2022.10.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2022.10.29 ஆந் திகதி நடைபெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட பகரங்க ஏல விற்பனையானது தவிர்க்க முடியாத காரணத்தர்ல் பிற்போடப்பட்டுள்ளது.*

*மேற் குறித்த அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க ஏல விற்பனையானது எதிர்வரும் 2022.11.19 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு நடைபெறும்.*

எம். எஸ்.எம். சம்சுதீன்,
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*கல்முனை,*
*2022.10.17.*

*10- 318*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*பிரின்ஸ் சாகர சேனாரத்ன தேசிய அடையாள அட்டை இல. 640123885V, இல.50/1 D, மயூரா பிளேஸ், கொழும்பு 06, இலங்கையின் Sagara Motors ( Private) limited (PV 71841) இன் இயக்குனரான நான், இதன் மூலம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிப்பது என்னவெனில் 2020.01.09 ஆந் திகதியிட்ட சட்டத்தரணி இல. 237, கொழும்பில் எஸ்.பி.ஏ. என். சில்வா, (நோட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்டவர்) Sagara மோட்டார்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆல் ORIENT FINANCE PLC இற்கு (நிறுவனத்தின் பதிவு இல. PB 1079/PQ) அதன் பதிவு அலுவலகம் (இல. 02, டீல் பிளேஸ், கொழும்பு 03 ) நியமிக்கப்பட்ட மேற்படி வழக்கறிஞருக்கு வழங்கிய அதிகாரங்கள் 2022.10.07 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படுகிறது.*

*2020.02.20 அன்று 21 ஆம் தொகுதி 303 மற்றும் தினசரி புத்தக உள்ளீடு 3024 இல், பத்தரமுல்ல ரெஜிஸ்டர் ஜெனரல் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் எழுதப்பட்ட அதிகாரங்களின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது). எதிர்காலத்தில் மேற்படி வழக்கறிஞர் செய்யும் எந்தவொரு செயலுக்கும் நாங்கள் பொறுப்பாளியாக மாட்டோம் .*

பிரின்ஸ் சாகர சேனாரத்ன,
இயக்குனர்- சாகர மோட்டர்ஸ் (பிரைவேட் )
லிமிடெட்.

*10-245*

## அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

*கேகாலை, பண்டாரநாயக்க மாவத்தை, 280 ஆம் இலக்கத்திலுள்ளவரும் 196757710126 என்ற இலக்கமுடைய தே.அ.அட்டையையுடையவருமாகிய அனுஜா கமகெதர ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ஜினதாச ஜயவிக்ரம என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 1176 என்ற இலக்கத்தையும் 2013.06.01 ஆந் திகதியிடப்பட்டதும் மஹர கடவத்த சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, 177/2A என்ற முகவரியையும் 443291199V என்ற தே.அ.அ.இலக்கத்தையும் கொண்டவருமாகிய சரத்சந்திர ராஜபக்ஷ என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவமானது இன்றி லிருந்து செயற்படும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் இலங்கைக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

அனுஜா கமகெதர .

*10-254*

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருநாகல், தபால் கெட்டுவான வீதி, இலக்கம் 151/ 10 என்ற முகவரியில் வசிக்கும் தேவதா பேஜ்ஜலாகே அஞ்ஜுல

அநுர பியசிங்ஹ ஆகிய நான், இலக்கம் 154, கெட்டுவான வீதி, குருநாகல் இல் வசிக்கும் வெத தூரயலாகே கெளும் பிரியன்த தர்மசேன என்பவருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு திருமதி வசன்தா அமரசேகர என்பவரினால் 2016.01.28 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 18685 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயாக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

தேவதா பேஜ்ஜலாகே அஞ்ஜுல அநுர.

10-255

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வத்தளை, ஹேகித்த செனவிரத்ன வீதி, இல. 19 ஐ சேர்ந்த (தற்போது இல. 57, டெவிஸ்டொக் அவனியு, கிறீன் போர்ட் , பெரி வேல், UB68AN, மிடில்செக்ஸ் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும்) விமல் ரோய் மரியநாயகம் (தேசிய அடையாள அட்டை இல. 197106610037 மற்றும் பிரித்தானிய கடவுச்சீட்டு இல. 510011985) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.டி. ஷிரோமி பெரேராவால் 2015.12.10 ஆந் திகதி உறுதிப்படுத்திய இலக்கம் 93 உடைய அற்றோணி அதிகாரப்பத்திரம் மூலம் எனது அற்றோணி அதிகாரம் உடையவராக இல. 819, அளுத்மாவத்தை, கொழும்பு 15 இல் வசிக்கும் ஜோசப் பசில் ரோய் மரியநாயகம் ( தேசிய அடையாள அட்டை இல. 742700488V) என்பவருக்கு வழங்கிய அற்றோணி அதிகாரத்தை 2022.09.27 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கின்றேன் எனவும் இனிமேல் அது செல்லுபடியாகாது எனவும் இலங்கையிலுள்ள அனைத்து பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

விமல் ரோய் மரியநாயகம்.

10-256

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 772/C, பன்னிப்பிடிய வீதி, பெலவத்தயில் வசிக்கும் அமரசிங்க நாமின்த லக்ருவன் பெரேரா (தே.அ.அ.இல. 693371708V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசகக் குடியரசுக்கும் மற்றும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது, பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு நாளனி இளங்கோன் என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட 151ஆம் இலக்க 2022.09.04 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் இல. 737/ 117, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15 இல் வசிக்கும் புண்ணிய மூர்தி கிரிஷான் (தே.அ.அ.இல.199929102375) என்பவரை எனது அற்றோணித் தத்துவகாரராக நியமித்தேன் என்பதுடன் இவ் அற்றோணி, அற்றோணித் தத்துவப் பத்திரம் 2022.10.12 ஆந் திகதி என்னால் இரத்துச் செய்யப்படுகின்றது.

இன்றிலிருந்து மேலே குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தை உபயோகப்படுத்தி செய்யப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்புதாரி ஆக மாட்டேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

அமரசிங்க நாமின்த லக்ருவன்
பெரேரா.

2022.10.12.

10- 257

---

## பொது அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இத்தால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக் கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 2020, பங்குனி மாதம் 12 ஆந் திகதியிடப்பட்டு Germany, Bremen ஐச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு WOLF LESCHMANN முகதாவில் நிறைவேற்றப்பட்ட பொது அற்றோணித்தத்துவப்பத்திரமானது, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த அருட்சோதி சாந்தினி (தே.அ.அ.இல. 596780466V) என்பவரின் பெயரில் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த தற்போது Bremen, Germany இல் வசிக்கும் செல்லத்துரை அரியநாயகம் மற்றும் ரமணி அரியநாயகம் ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2022, ஐப்பசி மாதம் 01 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவதாரியால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக் கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

செல்லத்துரை அரியநாயகம் மற்றும்
ரமணி அரியநாயகம்.

10- 280

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சீதுவ, லியனகேமுல்ல, 150/2 என்ற இலக்கத்தில் வசிக்கும் கொடிக்கார ஷியாமா சந்திரகாந்தி ஆகிய நான், 2017.11.28 ஆந் திகதியிடப்பட்டதும், 10643 என்ற இலக்கத்தையுடையதும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசித்த நொத்தாரிசு டோனா சிந்த குமுதினி விஜேசிங்ஹ, கொட்டுகொட, ரத்தொலுவ, C.D. de சில்வா மாவத்தை, 209/ 2 என்ற இலக்கத்தைச் சேர்ந்த குருகுலசூரிய அன்ட்ரூ றோஹான் பெர்னாந்து என்பவருக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் அடக்கிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்கின்றேன்.

கொடிக்கார ஷியாமா சந்திரகாந்தி .

10- 290

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

கடன் தொடர்பு இலக்கங்கள்: 74475077, 74475170, 74475261.

இல. 694/4, ரஜ எல, கந்தளாய் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரந்திலக கெதர வீரசிங்க, திரு. ரந்திலக கெதர கருணாதாச, திருமதி கோதாகொட கமகே பத்மினி, திருமதி ரந்திலக கெதர நிமல்கா மதுவந்தி ஆகியோரின் பங்காண்மையின் கீழுள்ள M/ S சம்பிக அரிசி ஆலையின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.07.07ஆந் திகதிய 2027ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.06.27ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 06-A, பெயாபீல்ட் காடின்ஸ், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏல நிறுவனத்தார் 2022.11.15ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு கந்தளாய் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவு, ராஜ எல கிராமத்தில் (கட்டலை பத்து) அமைந்துள்ள "ராஜ எல கொலனி" என அழைக்கப்படும் காணியின் துண்டு 780 ஆம் இலக்கக் காணித்துண்டின் கிழக்குப் பக்கத்திலுள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டானது- வடக்கு: 741 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு : 780 ஆம் இலக்க காணித்துண்டையும்; தெற்கு : 781 ஆம் இலக்க காணித்துண்டையும்; மேற்கு : 782 ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0றூ. 23.06பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் வீடு, அரிசி ஆலை மற்றும் சகலதும் ஆகும். இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் LDO/P/3/54 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. செல்லபிள்ளை தயாரித்த 1997, செத்தெம்பர் 19 ஆந் திகதியிட்ட இல. 553 ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின் படி மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுள் கந்தளாய், பிரதேச செயலாளர் பிரிவில் ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவில் கந்தளாய், ராஜ எல, பிரிவு 4/ 694 "ராஜ எல கொலனி" என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட 553 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டதுமான குறித்த காணித்துண்டு - வடக்கு, கிழக்கில்: பாதையும்; தெற்கு: மேற்குறிப்பிட்ட 553ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப் பட்டுள்ள காணித்துண்டு 2 ஐயும்; மேற்கு: F.T.P.2 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 782 ஐயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட 553 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0றூ. 23.06பே.) பரப்பளவையும் அதன்கண் அமைந்துள்ள வீடு, அரிசி ஆலை என அனைத்தையும் கொண்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டடத்துடன் இணைந்த இயந்திர சாதனங்கள் வருமாறு.-

இயந்திர சாதன விபரம்

1. Two 18 feet Elevators with 2 H. P. motors
2. Paddy cleaner with 3 H. P motor
3. Two paddy stoners within 2 H. P. motors
4. Two Hullers with 10 H. P. motors
5. Two 12 feet elevators with 2 H. P. motors
6. Automatic elevator and Huller with 10 H.P. motors
7. Separator with 15 HP motor
8. Polisher with motor
9. Two Rice Stoner with 2 HP motors
10. 17 feet Elevator with 2 HP motor
11. Winnower with 2 HP motor
12. Winnower with 2 HP motor
13. Paddy drier with 30 HP motor
14. Paddy cleaner with 3HP motor
15. Huller with 25 HP motor

16. Two 12 feet elevators with 2 HP motors
17. Two Winnower fans with 2 HP motors
18. Polisher with 25 HP motor and Starter
19. Rice Stoner with 3 HP motor and starter
20. 18 feet Elevator with 2 HP motor and starter
21. 12 x 4 x 4 feet Rice Bin
22. Grader with motor and starter
23. 110KVA Generator
24. Boiler
25. Blower
26. Suction Fan

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிக்கும் நிலமனைக்கும் தற்சமயம் பொருத்தப்பட்டுள்ளவையும் இதன் பின்பு பொருத்தப்படவுள்ள அனைத்தும் இதனுள் அடக்கும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

தி. விஜயபாஸ்கர்,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கந்தளாய்,
2022.09.26.

10- 275

---

HNB 71-2022

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – மொரட்டுவ கிளை**

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் படி ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என்.ஜே.பர்னாந்து அவர்களால் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட இல.2238 மற்றும் 1996.02.03 ஆந் திகதியிடப்பட்ட இல.4945 மற்றும் 2001.08.30 ஆந் திகதியிடப்பட்ட இல. 6962 உம் மற்றும் 2005.05.30 ஆந் திகதியிடப்பட்ட இல. 8260 மற்றும் 2008.02.21 ஆந் திகதியிடப்பட்ட இல. 9393 மற்றும் 2011.03.24 ஆந் திகதியிடப்பட்ட இல. 10559 மற்றும் 2014.09.10 ஆந் திகதியிடப்பட்ட இல. 10603 மற்றும் 2015.04.23 ஆந் திகதியிடப்பட்ட இல. 10759 மற்றும் 2016.02.16 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் இல.10984 மற்றும் 2017.02.28 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் கீழ் பெற்றுக் கொள்ளவேண்டிய கொடுப்பனவை செலுத்துவதற்கு, சென்ட் மேரிஸ் சோ மில்ஸ் என்ற தலைப்பின் மற்றும் வியாபார பெயரின் கீழ் தனிநபர் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் தேதிகமுவகே பிரான்சிஸ் நிமல் டயஸ் என்பவர் கடனாளியாக தவறுகை புரிந்துள்ளதாலும் அந்த ஈட்டு முறியின் கீழ் செலுத்த வேண்டிய கொடுப்பனவு தொகையை எல்லாவகையிலும் நிறுவப்பட்ட கொடுப்பனவு மற்றும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ.யினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 12.30 மணிக்கு இந்த ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பல்லேபத்துவ (மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் 554 சி கொரவெல்ல மேற்கு கிராம அலுவர் பிரிவினுள்) மொரட்டுவ மாநகர சபை எல்லையினுள் சமாஜவாதி நிவஹன் பிளேஸ், கொரலவெல்லயில் அமைந்துள்ள மாதன்கஹ வத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஜே.எம்.பி.எல்.த சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்ட இல.11/95 மற்றும் 1995, பெப்புருவரி 08 ஆந் திகதியுடைய வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட பதினாறு தசம் ஒன்பது ஆறு பேர்ச் (0ஏ.0றூ.16.96பே.) விசாலமுடைய காணியோடு, அதனுள் அமைந்துள்ள அனைத்து சகலதும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2022.08.19 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2022.09.23 ஆந் திகதியிடப்பட்ட "மவ்பிம", "டெயிலிமிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்**. - மொரட்டுவ பழைய பாலத்திற்கு அருகில் இருந்து மொரட்டுவ- கொரலவெல்ல பொது பிரயாண வீதியூடாக 01.6 கி.மீ. வரை பிரயாணம் செய்யும் பொழுது வலதுபக்கம் திரும்பி (அரசாங்க மருந்தகம் முன்னால்) சமாஜவாதி நிவஹன் பிளேஸ் (30 அடி அகலங்கொண்ட வாகனம் பிரயாணம் செய்யும் நகர சபை வீதி) ஊடாக 150 மீற்றர் வரை முன்நோக்கி பயணிக்கவும். வரிமதிப்பீட்டு இல. 21 என்ற குறித்த காணியின் வீதி இடது பக்கத்தில் அமைந்துள்ளது. (புனித மரியா பலகைத் தொழிற்சாலை)

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .- உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். காசோலைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனைகளை உறுதி செய்வதற்கு நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1500.00,
(6) முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும். 30 நாட்கள் தவறினால் கொடுக்கப்பட்ட பணம் 10% திரும்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது.

உரித்து உறுதி மற்றும் குறித்த ஆவணங்களை பரிசோதிக்க மற்றும் மேலதிக விபரங்களுக்கு -
மூத்த முகாமையாளர் (கடன்கள் அறவிடுதல்), ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10,

தொ. பே. இல.: 011-2661826, 011-2661835.

ஜே.டபிள்யூ. ஈ. ஜயவர்தன,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.59, குமார மாவத்தை,
படுவத,
தொடந்தூவ.

தொலைபேசி : 077-9663420, 071-3358434, 0742596429.
மின்னஞ்சல் : ejayawardhana 77@gmail.com

10- 229

---

## ஹற்றன் நெஷனல் பேங்க் பீஎல்சீ தலைமை அலுவலகக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

வரி இல. 23/65 மற்றும் 23/65A, தலவத்துகொட வீதி, ஹோகந்தர ஆகிய இடங்களில் முறையே 10.15 பேர்ச் மற்றும் 9.55 பேர்ச் கொண்ட பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம்.எல்.என். பெரேரா அவர்களால் 2007, ஒற்றோபர் 15 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட வரைபட இல. 4289 இல் விபரிக்கப்பட்டுள்ள 36A மற்றும் 36B எனக் குறிக்கப்பட்ட "வேவகெலே" என்று அழைக்கப்படும் வரி இல. 23/ 65, தலவத்துகொட வீதி, ஹோகந்தர எனும் முகவரியில் தலங்கம தெற்கில் விக்கிரமசிங்கபுர கிராம அலுவலர் பிரிவிற்குள் (இல.479/C) மற்றும் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் கடுவெல மாநகர சபையின் பத்தரமுல்ல அலகிற்குள் ஹேவாகம் கோரளை, பல்லே பத்துவில் கொழும்பு மாவட்டம், மேல் மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மற்றும் அதன் மீது நிற்கும் ஏனைய அனைத்தும்.

ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஆதரவாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என்.சி. ஜயவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011. 07.27 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 4095 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ்.எஸ்.ஹல்லொலுவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.02.26 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3302, 2013.02.26 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3567, 2015.05.21 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3695, 2016.07.14 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3695 ஆகிய அனைத்தும் கடனாளியாக வஸ்கமுவ ஆடை (பிரைவேட்) லிமிடெட் சார்பாக ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ வழங்கிய காலக்கடனை திருப்பிச் செலுத்துவதற்கான உத்தரவாதமாக, குறித்த வஸ்கமுவ ஆடை (பிரைவேட்) லிமிடெட் மெய்நிகர் உரிமையாளர்கள் மற்றும் மேற்கூறிய வஸ்கமுவ ஆடை நிறுவனத்தின் பணிப்பாளர்களாக மற்றும் அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தினராக ரவீந்திர புஷ்பகுமார அபேசேகர மற்றும் நாணயக்கார போபே யமுனா திசரணி வீரதுங்க ஆகியோருக்கு நிறைவேற்றப்பட்டதுடன், நிறுவனத்தின் உரிமைப் பின்னணி வெளியிடப்பட்டால், மேற்கூறிய ரவீந்திர புஷ்பகுமார அபேசேகர மற்றும் நாணயக்கார போபே யமுனா திசரணி வீரதுங்க ஆகியோர் ஹற்றன் நெஷனல் வங்கியினால் வஸ்கமுவ ஆடைத் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதிவசதியின் உண்மையான பயனாளிகளாவர் என்ற அடிப்படையில் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ க்கு ஆதரவாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.07.27 ஆந் திகதிய அடமானப் பத்திர இல.4095 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹல்லொலுவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.02.26 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3302, 2013.02.26 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3567, 2015.05.21 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3695, 2016.07.14 ஆந் திகதிய அடமானப் பத்திர இல. 3695 ஆகிய அனைத்தும் சார்பான மேற்கண்ட சொத்துக்களை,

எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில் 2022, நவெம்பர் 15 ஆந் திகதி காலை 11.00 மற்றும் 11.15 மணிக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் பொது ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**மேலதிக தகவல்களுக்கு**.- தயவு செய்து 2022.08.26ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் "மவ்பிம" "டேலிமிரர்" மற்றும் 2022.08.31 ஆந் திகதிய "தினக்குரல்" செய்தித் தாள்களையும் பார்க்கவும்.

**இடத்திற்குப் பிரவேசிக்கும் வழி**.- கொழும்பிலிருந்து பத்தரமுல்லை பஸார் வரை பயணித்து , பின்னர் பன்னிப்பிட்டிய வீதியில் விக்கிரமசிங்கபுர வீடமைப்பு வீதிக்கு 2 கிலோ மீற்றர் தூரத்தில் வலப்புறம் திரும்பி, இந்தக் கட்டடத்தில் இடதுபுறம் திரும்பி, ஐ.டீ.என். தொலைக்காட்சி நிலையம் வரை குறிப்பிட்ட வீதியில் பயணித்து, வலதுபுறம் உள்ள தார் வீதி மற்றும் ஹோகந்தரவை நோக்கிச் செல்லும் ஐ.டி.என். தொலைக்காட்சி

நிலையத்தின் வடக்கு எல்லையில் ஓடும் கொன்கிரீட் வீதியில் பயணித்து, ஐ.டி.என். வளாகத்தில் இருந்து அணைக்கப்படும் இடத்திலிருந்து 150 மீற்றர் தொலைவில் உள்ள ஒழுங்கையின் முன்பாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**.- வருங்கால கொள்வனவாளர் பின்வரும் பணத்தை விற்பனையின் போது செலுத்த வேண்டும்:

1. கொள்முதல் விலையின் 10% ;
2. உள்நாட்டு அதிகாரச் சபைக் கட்டணங்கள் 1% ;
3. 2 1/2 % ஏலதாரர் கட்டணம்;
4. விளம்பரக் கட்டணங்களின் மொத்த செலவு;
5. இலிகிதர் மற்றும் எழுதுனர் கட்டணம் ரூபா 2,000.00 ;
6. சான்றளிப்பதற்கான விற்பனை நிபந்தனைகள் நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,500.00 மற்றும் ஏனையவை.

கொள்முதல் விலையில் மீதமுள்ள 90% தொகை ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

உரிமைப்பத்திரங்கள் மற்றும் இதர ஆவணங்களின் ஆய்வுக்காக, சிரேஷ்ட முகாமையாளர், (மீட்புகள், ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ, எச். என். பி. டவர்ஸ், இல. 479, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இலக்கங்கள்: 011- 2661828, 011- 2661866.

பீ.கே.இ.சேனாபதி,
பட்டய ஏலதாரர், நீதிமன்ற
ஆணையாளர்
மற்றும் மதிப்பீட்டாளர்.

இல.134,பெத்தகான வீதி,
கோட்டை.

தொலைபேசி இல. : 011-2873656, 011- 2871184,
077- 7672082, மற்றும் 0777449452.

10- 248

---

## கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் - கண்டி கிளை

பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

கெண்டி ரோயல் இங்கிலிஸ் தனியார் நிறுவனம் கடப்பாடுடையவர் என்ற வகையில் கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட் ( பதிவு செய்யப்பட்ட இல. PB 4847 உடைய) பெயருக்கு பிரசித்த நொத்தாரிசு ஏ.சி. நதீஷாவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.12.27 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 555 என்ற அடமானப் பத்திரத்தில் செலுத்த வேண்டிய தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியமையினால்,

கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட்டினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணியானது 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஏலத்திலும் உள்ள ஏல நேரங்களின் பிரகாரம் அந்தக் காணிகள் அமைந்திருக்கும் இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சின் கோவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் அமையவே நடாத்தப்படும்.

### அட்டவணை

### 01 ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப. 11.00 மணி

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கடவத்த சதர கங்காவட கோரளே கண்டி மாநகர சபை எல்லைக்குள் மற்றும் கண்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அம்பிடிய வடக்கு 253 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் விக்டோரியா டிரைவ் தற்பொழுது சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள மகாமாயா மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 2/1 ஐ கொண்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி.எஸ். கே. ஜெயரத்ன என்பவரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2010, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி இலக்கம் 648 என்ற நில ஒதுக்கீட்டின் பிரகாரம் பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் "1" என்ற காணித்துண்டு அளவில் பதினைந்து தசம் ஒன்று ஒன்று பேர்ச் (0ஏ.0றூ.15.11பே.) விஸ்தீரணமான காணித்துண்டு மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச் செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். மேலும் இந்தக் காணியானது கண்டி காணிப் பதிவு அலுவலகத்தில் தொகுதி இலக்கம் 436/287 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் 648 என்ற காணித்துண்டின் இலக்கம் 2 (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என்ற பகுதியில் வழியின் உரிமையுடன் கூடியது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**: கண்டி நகரத்தில் இருந்து (மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் இருந்து) கண்டி சங்கராஜ மாவத்தை (தற்போது கண்டி - திகன பிரதான வீதி என அறிமுகப்படுகிறது) 1.5 கி.மீ. மகாமாயா மாவத்தை சந்தி வரை சென்று பிறகு வலது பக்கத்தில் உள்ள மகாமாயா மாவத்தையில் 25 மீ. சென்ற பிறகு வரிமதிப்பீட்டு இலக்கம் 2/1 மஹாமாயா மாவத்தையின் பிரதான நுழைவாயிலில் இருந்து வந்தவுடன் இவ் விடயத்திற்கான காணி வலது புறத்தில் அமைந்துள்ளது.

### 02 ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப. 11.30 மணி

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கடவத்த சதர கங்காவட கோரளே கண்டி மாநகர சபை எல்லைக்குள் மற்றும் கண்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அம்பிடிய வடக்கு 253 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் விக்டோரியா டிரைவ் தற்பொழுது சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள மகாமாயா மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 2/1 ஐ கொண்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி.எஸ். கே. ஜெயரத்ன என்பவரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2010, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி இலக்கம் 648 என்ற நில ஒதுக்கீட்டின் பிரகாரம் பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் "3" என்ற காணித்துண்டு அளவில் ஒரு றூட் ஒன்பது தசம் ஆறு நான்கு பேர்ச் (0ஏ.01றூ.9.64பே.) விஸ்தீரணமான காணித்துண்டு மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச் செய்கைகள் மற்றும் அதில்

அமைந்துள்ள யாவும் ஆகும். மேலும் இந்தக் காணியானது கண்டி காணி பதிவு அலுவலகத்தில் தொகுதி இலக்கம் 436/288 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் 648 என்ற காணித்துண்டின் இலக்கம் 2 (வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) என்ற பகுதியில் வழியின் உரிமையுடன் கூடியது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**: கண்டி நகரத்தில் இருந்து (மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் இருந்து) கண்டி சங்கராஜ மாவத்தை (தற்போது கண்டி - திகன பிரதான வீதி என அறிமுகப்படுகிறது) 1.5 கி.மீ. மகாமாயா மாவத்தை சந்தி வரை சென்று பிறகு வலது பக்கத்தில் உள்ள மகாமாயா மாவத்தையில் 25 மீ. சென்ற பிறகு வரிமதிப்பீட்டு இலக்கம் 2/1 மஹாமாயா மாவத்தையின் பிரதான நுழைவாயிலில் இருந்து வந்தவுடன் இவ் விடயத்திற்கான காணி வலது புறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.04.01 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும், 2021.04.07 ஆந் திகதிய "டெய்லி திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10(நூற்றுக்குப் பத்து வீதம்);

(2) உள்ளூராட்சி மன்ற வரி 01% (நூற்றுக்கு ஒன்று);

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (கொள்வனவு விலையின் (இரண்டரை வீதம்) 2 1/2 % அதற்கு மேலாக ஏற்புடைத்தான வரிகள் ;

(4) விளம்பரத்திற்கான மொத்த செலவுகள் மற்றும் ஏல விற்பனைக்காக ஏற்படும் பிற செலவுகள் அனைத்தும்;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;

(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிடத்து, ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% வீத பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள: மீள்பெறுகை- தலைவர், மீள்பெறுகை தலைமையகம், கார்கில்ஸ் வங்கி லிமிட்டட், இலக்கம் 696, காலி வீதி, கொழும்பு 3.

தொ.பே.இல. 011-7640450.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,விலை
மதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

10- 319